**வாரியபொல பிரதேச சபைய - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வாரியபொல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வாரியபொல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச செயலகத்திடமிருந்து கையளிக்கப்பட்ட கையளிப்பின் கீழ் கிடைத்திருந்த 5 ஏக்கர் 2 றூட் அளவிலான 04 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | சரியாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,000,084 பெறுமதியான 2,544 புத்தகங்களை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நூலகப் புத்தகங்கள் கொள்வனவு மூலதனமாக்கப் படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் காணி ஏல விற்பனைகளிலிருந்து சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 5,849,600 அளவிலான 15 காணிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு குறித்துக் கொள்கின்றேன். | பொது நடவடிக்கை களுக்காக சபைக்கு வழங்கப்பட்ட காணிகள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது காணி மற்றும் கட்டிடங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 6,637,920 பெறுமதியான 07 சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளுக்குமுரிய நிர்மாணம் மற்றும் செயற்திட்டங்களுக்காக பெற வேண்டிய ரூபா 485,785 பெறுமதியான 04 கடன்பட்டோர் மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு குறித்துக் கொள்கின்றேன். | |
| (ஊ) | முன்னைய ஆண்டுகளுக்குரிய பெற வேண்டிய முத்திரைக் கட்டண மீதி ரூபா 6,811,883 ஆக இருந்த போதும் அது ரூபா 4,213,292 கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ரூபா 2,598,591 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலுவையை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் குழாய்க்கிணறுகளின் வைப்புக் கணக்கு மீதி ரூபா 241,593 ஆக இருந்த போதும் அது ரூபா 139,337 என ரூபா 102,256 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 3,102,977 பெறுமதியான நிர்மாண பிணை வைப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்களை நாளதுவரையாக்கி சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைக் கட்டளைச் சட்டத்தின் 219 ஆம் பிரிவு | இப்பிரிவில் நிதியேற்பாடுகளிலிருந்து விலகி இரண்டு ஊழியர்கள் சங்கமொன்றை அமைத்து அச்சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளராக செயற்பட்டு சபையின் | இது தொடர்பாக பரீட்சித்து கணக்காய்விற்கு விரைவில் அறிக்கையிடுகின்றேன். | சட்டத்தின் 219 ஆம் பிரிவிலிருந்து விலகி நடவடிக்கை எடுத்த நபர்கள் தொடர்பாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திட்டு 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 4,588,838 பெறுமதியான 06 நிர்மாணங்களை செய்திருந்தது. | | தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2021 செப்தெம்பர் 29 ஆந் திகதிய 1/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.5 | கையளிக்கப்படும் ஒப்பந்தம் சமூக அடிப்படையிலான அமைப்பின் அதிகாரப் பிரதேச வரையறைக்குள் இருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரப் பிரதேசத்திலிருந்து ரூபா 2,228,797 பெறுமதியான 3 ஒப்பந்தங்கள் சனசமூக சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. | இந்நிர்மாணத்திற்காக குறித்த பிரதேசத்தின் அரசசார்பற்ற சங்கங்கள் முன்வராமையால் பிரதேசத்திலிருந்து வெளியே வாரியபொல பிரதேச சபையில் பதிவு செய்யப்பட்ட சமூக குழுவொன்றுக்கு வழங்குவதற்கு நேர்ந்ததாக குறிப்பிடுகின்றேன். | சுற்றறிக்கை அறிவுரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,431,413 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,608,022 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதவரியும் வரியும் | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் 4457 வீதவரி அலகுகளிலிருந்து ரூபா 4,865,584 ஆன வீதவரி அறவிடப்பட்டிருக்காததுடன் அறவிடுவதற்கு வேலைத்திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை தீர்வு செய்வதற்காக சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் காலரீதியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற

வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டுபத்த பல்நோக்கு கட்டிடத்தின் 23 கடைகள் கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் மின் இணைப்பு வழங்குவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக 2021 ஆம் ஆண்டில் சபைக்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 1,753,500 ஆக இருந்தது. | கட்டுபத்த பல்நோக்கு கட்டிடத்தின் நீர் மற்றும் மின்சாரங்களை வழங்கி இந்த வீதியிலிருந்து அவ்வருமானத்தை சபைக்கு பெறக்கூடிய வகையில் இவ்வாறான எதிர்பார்ப்பதாக குறிப்பிடுகின்றேன். | சபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது வருமானம் உழைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வாரியபொல புதிய சந்தைக் கட்டிடத் தொகுதியின் புதிய கடைகள் கேள்வி அடிப்படையில் கேள்வி தாரரால் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் 19 கடைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 41,355,000 ஆன ஒரே தடவையில் கொடுப்பனவு தொகையொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரே தடவையில் கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு குறித்த தரப்பினருக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை புதிய கட்டிடங்கள் மக்கள் மயப்படுத்தப்படவில்லை என்பதால் குத்தகையாளர்கள் பணத்தை கொடுப்பனவு செய்வதை தவிர்த்திருந்தனர். | ஒரே தடவையில் கொடுப்பனவு தொகையை அறவிட்டு கடைகளை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வாரியபொல பஸ் நிறுத்துமிட வளவில் மரக்கறி மற்றும் பழக்கடைகள் கடையொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 3,500,000 ஆன மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தனியார் நிறுவனமொன்றுடன் 2020 சனவரி 20 ஆந் திகதி உடன்படிக்கை | செயலாற்றல் பாதுகாப்பை பெற்றுக் கொள்ளாததாக அறியத் தருகின்றேன். நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை மற்றும் பொருட்கள் விலை அதிகரித்துச் சென்றதன் காரணமாக இந்நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்க தாமதம் ஏற்பட்டிருந்தது. | முற்பண பாதுகாப்பு சான்றிதழ்களை பெற்றுக் கொண்டு முற்பணம் செலுத்த வேண்டிய உடன்படிக்கை பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்குரிய முற்பண பாதுகாப்பை பெற்றுக்கொள்ளாமல் 2020 ஏப்ரல் 29 ஆந் திகதி 689,808 ஆன முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையில் இணங்கப்பட்டிருந்த பெறுமதியில் மேலும் எஞ்சியுள்ள 10 உருப்படிகளின் பூர்த்தி செய்யப்படாத வேலைகளின் பெறுமதி ரூபா 908,466 ஆக இருந்தது. | | |
| (ஆ) | வல்பொல குடிநீர் செயற்திட்டத்திற்காக இரண்டாம் கட்டத்தின் கீழ் ரூபா 4,878,474 ஆன நிதியேற்பாடு செயற்படுத்துவதற்காக வாரயிபொல பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்டிருந்த மேற்படி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக கோவைகள் மற்றும் பௌதீக பரீட்சையின் போது முற்பண கொடுப்பனவை பாதுகாப்பாக பெற்றுக்கொண்டு ரூபா 874,741 முற்பணத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2021 திசெம்பர் 21 ஆந் திகதி முதல் ரூபா 4,308,220 ஆன ஒப்பந்த நிகழ்ச்சித் திட்டங்க்ள செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2022 பெப்ரவரி 17 ஆந் திகதி வரை ரூபா 292,340 கூடுதலாக இருப்பது மாத்திரம் அவதானிக்கப்பட்டது. | • ரூபா 60,000 பிணை வைப்புக்கள் தொகை பின்தொடர் நடவடிக்கையின் காரணமாக கொண்டு செயலாற்றல் பாதுகாப்பிற்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இதன் பின்னர் முன்கொண்டு வரப்பட்ட தவறுகள் இல்லாமல் தயாரிக்குமாறும் விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>• 2022.05.18 ஆந் திகதி நடைபெற்ற நிதி மற்றும் கொள்கை குழுவின் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகாரம் அவர்கள் நிதிக்கூற்றுக்கள் நாட்டில் காணப்படும் பொருளாதார பிரச்சினையின் அடிப்படையில் 2022.06.15 ஆந் திகதிக்கு முன்னர் செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகை செயற்பாட்டு கோவை நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தக்காரருக்கு ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |